

# இரவில் பிரகாசிக்கிற சுடர்களாக

**ஓய்வுநாள் பிற்பகல்**

**இவ்வார ஆராய்ச்சிக்கு:** பிலி 2:12–30; ரோமர் 3:23,24; 5:8; 2தீமோ 4:6; 1கொரி 4:17; 2 தீமோ 4:21,13; லூக் 7:2.

**மனன வசனம்:** ஜீவவசனத்தைப் பிடித்துக்கொண்டு, உலகத்திலே சுடர்களைப்போலப் பிரகாசிக்கிற நீங்கள், கோணலும் மாறுபாடுமான சந்ததியின் நடுவிலே குற்றமற்றவர்களும் கபடற்றவர்களும், தேவனுடைய மாசற்ற பிள்ளைகளுமாயிருக்கும்படிக்கு, எல்லாவற்றையும் முறுமுறுப்பில்லாமலும் தர்க்கிப்பில்லாமலும் செய்யுங்கள். பிலிப்பியர் 2:14,15.

எபிரெய மக்களிடம் கீழ்ப்படியும்படி தேவன் சொன்னார். 'ஜனங்களின் கண்களுக்குமுன்பாகவும் இதுவே உங்களுக்கு ஞானமும் விவேகமுமாய் இருக்கும்; அவர்கள் இந்தக் கட்டளைகளையெல்லாம் கேட்டு, இந்தப் பெரிய ஜாதியே ஞானமும் விவேகமுமுள்ள ஜனங்கள் என்பார்கள்' என்பதே அதற்குக் காரணம் உபா 4:6.

பல நூற்றாண்டுகளுக்கு பிறகு இயேசு, 'நான் உலகத்திற்கு ஒளியாயிருக்கிறேன், என்னைப் பின்பற்றுகிறவன் இருளிலே நடவாமல் ஜீவ ஒளியை அடைந்திருப்பான்' என்றார். யோவான் 8:12. மேலும், 'நீங்கள் உலகத்துக்கு வெளிச்சமாயிருக்கிறீர்கள்; மலையின்மேல் இருக்கிற பட்டணம் மறைந்திருக்கமாட்டாது' என்றார். மத் 5:14. நாம் எவ்வாறு அந்த வெளிச்சமாக இருக்கலாம்? இயேசுவுடன் இணைந்திருப்பதால் மட்டுமே 'உலகத்திலே வந்து எந்த மனுஷனையும் பிரகாசிப்பிக்கிற ஒளியாக' இருக்கமுடியும். 'தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி, இயேசுவின் நாமத்தில் வானோர் பூதலத்தோர் பூமியின் கீழானோருடைய முழங்கால் யாவும் முடங்கும்படிக்கும், இயேசுகிறிஸ்து கர்த்தரென்று நாவுகள் யாவும் அறிக்கைபண்ணும்படிக்கும், எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்குத் தந்தருளினார்.' பிலி 2:9-11

இயேசுவிடம் தங்கள் வாழ்க்கையை அர்ப்பணித்திருக்கிற அனைவருமே பரலோக வெளிச்சத்தையும் வல்லமையையும் பெறமுடியும். எல்லாவற்றையும் தேவனே செய்யவும் அல்லது நம் சொந்தக் கருத்துகள் மற்றும் திட்டங்களின்படி நடக்கவும் பெரும்பாலும் எதிர்பார்க்கிறோம். அதனால்தான் பிலிப்பியருக்கு பவுல் சொல்கிற வார்த்தைகள் இன்று நமக்குப் பொருத்தமாக உள்ளன.

*2026, ஜனவரி 31 வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்*

# தேவன் உள்ளே செய்வதை வெளியே செய்கிறோம்

தாழ்மைக்கும் கீழ்ப்படிதலுக்கும் இயேசு பரிபூரண உதாரணமாக இருந்ததைக் காட்டிவிட்டு, பிலிப்பியரைப்பற்றி பவுல் பேசுகிறார். சுவிசேஷ செய்தியை ஏற்றுக்கொண்டு அவர்கள் கீழ்ப்படிந்ததையும், அதில் தொடர்ந்து நிலைத்திருக்கவும் வலியுறுத்துகிறார். அப் 16:13-15,32,33.

கிறிஸ்துவின் வாழ்க்கையும் சிலுவை அனுபவமுமே இரட்சிப்புக்கான வழி. அவற்றை எவ்வாறு நடைமுறை வாழ்க்கையில் சாத்தியமாக்கவேண்டும் என்பதைச் சொல்கிறார்.

**'உங்கள் இரட்சிப்பு நிறைவேறப் பிரயாசப்படுங்கள்' என்று பவுல் சொல்வதின் அர்த்தம் என்ன? பிலி 2:12,13. விசுவாசத்திற்கும் கிரியைகளுக்கும் இடையிலுள்ள வித்தியாசம் என்ன?**

---

ரோமரிலும் தன்னுடைய பிற நிருபங்களிலும் பவுல் வலியுறுத்துகிற சுவிசேஷமும், இந்த இரண்டு வசனங்களிலும் சொல்கிற சுவிசேஷமும் வேறல்ல. விசுவாசத்தினால் நீதிமானாகிறோம் என்பதில் அவருக்கு மாற்றுக் கருத்தே இல்லை; பிலிப்பியிலும் பிற இடங்களிலும் அதையே பிரசங்கித்தார். வேதாகமம் சம்பந்தப்பட்ட எந்தக் கருத்தையும் வேதாகமம் முழுவதிலும் அதுபற்றிச் சொல்லப்படுவதை வைத்து ஆராயவேண்டும். இரட்சிப்பு கருத்தும் அப்படித்தான், இல்லையெனில், தவறாகப் புரிந்துகொள்ள நேரிடும்.

**இரட்சிப்புபற்றி ரோமர் 3:23,24; 5:8; எபே 2:8-10 வசனங்கள் சொல்வது என்ன?**

---

இரட்சிப்பு முற்றிலும் தேவனுடைய கிரியை. அதில் நமக்கு இம்மியளவும் புகழில்லை. விசுவாசமும்கூட ஓர் ஈவுதான்; பரிசுத்த ஆவியானவருடைய கிரியையால் அது ஊக்கமடைகிறது. நம் கிரியைகள் நம்மை இரட்சிக்கமுடியாது; ஆனாலும் புதுபிறப்பின்மூலம் தேவன் நம்மை ஆவிக்குரியவர்களாக மீண்டும் சிருஷ்டிக்கிறார், நாம் நற்கிரியைகளைச் செய்யத் திறனளிக்கிறார். தேவ ஆவியானவர் நமக்குள்ளாகக் கிரியைசெய்து, நாம் சரியானதைத் தேர்ந்தெடுக்கவும், சோதனைக்கு எதிர்த்து நிற்கவும், சரியான தீர்மானங்களைச் செய்யவும் உதவுகிறார்.

எனவே தேவன் நமக்குள்ளாகச் செய்வதையே 'அதிக பயத்தோடும் நடுக்கத்தோடும்' வெளியே செய்கிறோம். பிலி 2:12. கீழ்ப்படிய முயன்றும் இயலாமல், தேவன் தண்டிப்பாரோ என்று பயந்து, நடுங்கும்படி வசனம் சொல்கிறதா? இல்லை. தேவ பிரசன்னத்தையும் கீழ்ப்படிவதற்கான அவசியத்தையும் உணர்ந்து, பயந்து, நடுங்கவேண்டும். சங் 2:11.

---

**கிறிஸ்து உங்களுக்குள் கிரியைசெய்வதை எந்தெந்த வழிகளில் அனுபவித்திருக்கிறீர்கள்? தேவன் உங்களுக்குள் செய்கிற கிரியையை எதிர்த்து உங்களுடைய விழுந்துபோன இயல்பு எவ்வாறு போரிடுகிறது? அதை நீங்கள் எவ்வாறு எதிர்க்கலாம்?**

---

# இருண்ட உலகத்தில் வெளிச்சம்

'எல்லாவற்றையும் முறுமுறுப்பில்லாமலும் தர்க்கிப்பில்லாமலும் செய்யுங்கள்' என்று பிலிப்பியரை பவுல் வலியுறுத்துகிறார். பிலி 2:16. திருச்சபையின் ஒற்றுமையை மும்முரமான முயற்சியின்றி நாம் பாதுகாக்க முடியாது. திருச்சபையின் ஒற்றுமை கிறிஸ்துவோடான ஐக்கியத்தாலும் அவரது வார்த்தைக்குக் கீழ்ப்படிவதாலும் வருகிற ஒரு இணைபொருள். அது நம் சாட்சிக்கு இன்றியமையாதது; அதையே 'உலகத்திலே சுடர்களைப்போலப் பிரகாசியுங்கள்' என்று பவுல் சுட்டிக்காட்டுகிறார். பிலி 2:15.

நகர மின்விளக்குகளும், தெருவிளக்குகளும், நிலா வெளிச்சமும் இல்லாத இரவில் நட்சத்திரங்கள் தெளிவாகத் தெரியும், பிரகாசமாக ஜொலிக்கும். இதற்கு காரணம் வேற்றுநிலை. வானம் எவ்வளவு இருளாக இருக்கிறதோ, அவ்வளவுக்கு நட்சத்திரங்கள் தெளிவாகத் தெரியும். அதுபோலத்தான் நம் சாட்சியும். நம்மைச் சுற்றிலும் ஒழுக்க இருள் அதிகமாக இருக்கும்போது, தேவனுடைய உண்மையான பிள்ளைகளின் வாழ்க்கையானது உலகப்பிரகாரமான மனிதர்களின் வாழ்க்கையிலிருந்து வேறுபட்டு வெளிச்சமாகத் தெரியும். அதனால் உலக கருத்துகள், அழுத்தங்கள், நடைமுறைகள் போன்ற செயற்கை வெளிச்சங்கள் நம் சாட்சியை மங்கப்பண்ண அனுமதிக்கவே கூடாது.

**தேவபிள்ளைகளாகிய நாம் செயல்படவேண்டிய விதம்பற்றி பவுல் என்ன சொல்கிறார்? பிலி 2:15,16.**

---

'மாசற்றவர்கள்' என்றால், 'குற்றமற்றவர்கள், பழிச்சொல்லுக்கு இடமளிக்காதவர்கள்' என்று அர்த்தம். யோபு தன் குற்றமற்ற நடத்தைக்காக இவ்வாறு அழைக்கப்பட்டார். யோபு 1:1, 8; 2:3; 11:4; 33:9. 'கபடற்றவர்கள்' என்றால் 'கலப்படமில்லாத, சுத்தமான' என்று அர்த்தம். தம் சாட்சிகள் கொடிய தாக்குதல்களுக்கு ஆளாவார்கள் என்பதை அறிந்த இயேசு 'புறாக்களைப்போலக் கபடற்றவர்களாய்இருங்கள்' என்றார். மத்10:16. பவுலும், 'தீமைக்குப்பேதைகளாயிருங்கள்' என்கிறார். ரோமர் 16:19. இன்று ஊடகங்கள் நன்மையான விஷயங்களாக இல்லை. இதுபோன்ற சூழலில், தாவீதின் பழக்கத்தை நாம் ஒரு முக்கிய விதியாகக் கடைப்பிடிக்கலாம். அதாவது, 'தீங்கான காரியத்தை என் கண்முன் வைக்கமாட்டேன்.' சங் 101:3.

வித்தியாசமானவர்களாக இருப்பதற்கு பயப்படக்கூடாது, நம் விசுவாசம் நம்மை வித்தியாசப்படுத்திக்காட்டவேண்டும். 'உலகத்திலே சுடர்களைப்போலப் பிரகாசிப்பதே' நம் இலக்கு. பிலி 2:14. அதற்கு ஒரு வழி இந்த உலகத்திற்கு ஒத்த வேஷந்தரிக்காமல், 'ஜீவவசனத்தைப் பிடித்துக்கொள்ள' வேண்டும். ரோமர் 2:14. நாம் 'கிறிஸ்துவின் நாளை' மனதில் வைத்து வாழ்ந்தோமா, அல்லது 'வீணாகப் பிரயாசப்பட்டோமா' என்பதை நம் தீர்மானங்கள் காட்டுகின்றன. ரோமர் 2:14. ஒப்பிடவும் 1கொரி 9:24-27.

---

**உங்கள் வாழ்க்கையில் 'உலகப்பிரகாரமான' அம்சங்கள் இருக்கலாம்; இருக்கும். அவற்றிலிருந்து எவ்வாறு சுத்திகரிக்கப்படலாம்?**

# ஜீவபலி

**பிலி 2:17; 2 தீமோ 4:6; ரோமர் 12:1, 2; 1 கொரி 11:1 ஆகிய வசனங்களில் பவுல் சொல்வது என்ன?**

---

கிறிஸ்துவின் சேவையில் மரிப்பதா அல்லது வாழ்வதா என்கிற போராட்டம் பவுலுக்கு இருந்தது. பிலி 1:20-23. தான், 'பானபலியாக ஊற்றப்பட' வாய்ப்பிருப்பதாகச் சொல்கிறார். பிலி 2:1, சமகால மொழிபெயர்ப்பு. முற்கால பான பலிகளின் நடைமுறையை உருவகமாக வைத்துப் பேசுகிறார்; தேவனுக்கு எண்ணெய், திராட்சரசம், தண்ணீர் போன்ற திரவப்பொருட்களை பலியாக ஊற்றுவார்கள். ஆதி 35:14; யாத் 29:40; 2சாமு 23:15-17. விலையுயர்ந்த திரவத்தை 'வீணாக' ஊற்றுவதுபோலத் தெரியலாம்; 'விலையேறப்பெற்ற நளதம் என்னும் உத்தம தைலத்தை' இயேசுவின் தலையிலும் பாதத்திலும் மரியாள் ஊற்றின செயலை இது ஞாபகப்படுத்துகிறது. மாற்கு 14:3-9; யோவான் 12:3. அது பான பலியாக இல்லாமலிருக்கலாம், ஆனாலும் நம் இரட்சிப்புக்காக கிறிஸ்து ஏறெடுத்த விலைமதிக்க முடியாத தியாகத்தைச் சுட்டிக்காட்டுகிற மகத்தான காணிக்கையாக இருக்கிறது.

சுவிசேஷத்தை அறிவிக்கிற பணியில்தான் கொல்லப்பட்டால், தன் வாழ்க்கை தேவனுக்கு ஒரு பலியாக 'வார்க்கப்படும்' என்று பவுல் மகிழ்ந்தார். பானபலியானது தனியாக அல்ல, மற்ற பலிகளுடன் சேர்த்துத்தான் செலுத்தப்பட்டது. எண் 15:1-10; 28:1-15. பிலிப்பிய விசுவாசிகள் தங்கள் வாழ்க்கையை தேவனுக்கு 'ஜீவ பலியாக' அர்ப்பணித்திருந்தார்கள்; அவர்களுடைய 'சேவைக்கும் பலிக்கும்' துணை பலியாக தன் வாழ்க்கை அர்ப்பணிக்கப்பட பவுல் ஆசைப்பட்டார்.

ஆதிக் கிறிஸ்தவர்கள், ஏன் பிலிப்பிய விசுவாசிகள் தங்கள் விசுவாசத்தை உற்சாகமாகச் சாட்சியிட்டார்கள். பிலி 1:27-29. வீடு வீடாக சுவிசேஷத்தை அறிவித்தார்கள். அப் 5:42. வேத ஆராய்ச்சிகளுக்கு தங்கள் வீடுகளில் இடமளித்தார்கள். அப் 12:12; 1 கொரி 16:19; கொலோ 4:15; பிலே 1, 2. தங்கள் விசுவாசத்திற்கு வேதாகமத்திலிருந்து காரணங்களைக் காட்டினார்கள். அப் 17:11; 18:26; 1 பேதுரு 3:15. நம் அட்வென்ட்ஸ்ட் முன்னோடிகளும் அவ்வாறே செய்தார்கள். தங்கள் அக்கம்பக்கத்தாருக்கு போதகர் வந்து சுவிசேஷத்தை அறிவிப்பதற்குக் காத்திராமல், தாங்களே தங்கள் விசுவாசத்தைப் பகிர்ந்தார்கள், வேத ஆராய்ச்சிகளை நடத்தினார்கள், ஊழியர்கள் அங்கு வரும்போது மக்கள் ஞானஸ்நானத்திற்கு ஆயத்தமாக இருக்கும்படிக்கு அவர்களை ஆயத்தப்படுத்தினார்கள். அதாவது, தங்களை 'ஜீவ பலியாக' ஒப்புக்கொடுத்து, சுவிசேஷத்தை அறிவிக்க பிரயாசப்பட்டார்கள். நாமும் அதைப்போல் செய்யவேண்டும் அல்லவா?

---

**உங்களுடைய வாழ்க்கையை 'ஜீவ பலியாக' ஒப்புக்கொடுப்பது என்றால் என்ன? தேவனுடைய ராஜ்யத்திற்காக எவ்வளவு தியாகம் செய்கிறீர்கள்? உங்களைப்பற்றி உங்கள் பதில் சொல்வது என்ன?**

---

# உத்தம குணம்

பிலிப்பியர் நிருபத்தை அனுப்பிவைக்க தீமோத்தேயும் உதவினார். பிலி 1:1. பவுலின் உடன் ஊழியர்களில் தீமோத்தேயு மிகவும் பயனுடையவராக இருந்தார். தீமோத்தேயு ஒரு சுவிசேஷகர். 2தீமோ 4:5. பவுல் அவரை மக்கெதோனியாவுக்கு அனுப்பினார். 1தெச 3:2; அப் 18:5; அப் 19:22. கொரிந்துவுக்கும் பலமுறை அனுப்பியிருக்கிறார். 1கொரி 4:17; 16:10. முன்பு கொரிந்துவிலும், பிறகு எபேசுவிலும் பவுலோடும் சீலாவோடும் சேர்ந்து தீமோத்தேயு ஊழியம் செய்திருக்கிறார். 1தெச 1:1; 2தெச 1:1; 1தீமோ 1:2, 3; அப் 19:22. தீமோத்தேயுவை 'என்னைப்போல மனதுள்ளவன்' என்கிறார். பிலி 2:20. இதற்கான கிரேக்க வார்த்தைக்கு 'ஒரே ஆத்துமாவுடையவன்' என்று அர்த்தம். எனவே கிறிஸ்துவுக்கு தன்னை அர்ப்பணிப்பது, சுவிசேஷத்தை உற்சாகமாக அறிவிப்பது, பிலிப்பியர்கள்மீது அக்கறை காட்டுவது உட்பட பல வழிகளில் பவுலைப்போல வாழ்ந்திருக்கிறார்.

**தீமோத்தேயுவைபற்றி அதிக நேரம் பவுல் நற்சாட்சி கொடுப்பது ஏன்? பிலி 2:19-23. அவரைப்பற்றி வேறு என்ன பவுல் சொல்கிறார்? 1கொரி 4:17; 2தீமோ 1:5.**

அடுத்ததாக தீமோத்தேயுவின் 'உத்தமகுணத்தை' பவுல் குறிப்பிடுகிறார். பிலி 2:22. இதற்கான கிரேக்க வார்த்தைக்கு 'சோதனைகளால் முற்றிலும் சோதிக்கப்பட்டு, இயல்பிலும் சேவையிலும் சுத்தமானதாக விளங்குவது' என்று அர்த்தம். ரோமர் 5:4; 2கொரி 2:9; 9:13. தீமோத்தேயு அத்தகைய நபர். சுவிசேஷத்தைப் பரப்புகிற பணியில் இருவரும் சேர்ந்து பணியாற்றியபோது பல சமயங்களில் பவுல் இதைக் கண்டிருந்தார்.

வாழ்க்கையின் கடினமான அனுபவங்கள்தாம் நம் மனநிலையைச் சோதித்து, நம் உள்ளான இயல்பை வெளிப்படுத்துகின்றன. அதை எலன் ஒய்ட இவ்வாறு சொல்கிறார்: 'வாழ்க்கை ஒழுக்கம் சம்பந்தப்பட்டது. மனநிலையைச் சோதிக்கிற கோபமூட்டல்கள் உண்டாகும்; அவற்றை சரியான மனநிலையுடன் எதிர்கொள்வதில்தான் கிறிஸ்தவ நற்பண்புகள் உருவாகின்றன. காயங்களையும் அவமானங்களையும் தாழ்மையுடன் சகித்தால், நிந்தையான வார்த்தைகளுக்கு மெதுவான பிரதியுத்தரங்களையும், ஒடுக்குதலான செயல்களுக்கு இரக்கச் செயல்களையும் வெளிப்படுத்தினால், அதுதான் இருதயத்தில் ஆவியானவர் வாசஞ்செய்வதற்கான ஆதாரம்.'[1] 'தேவன் நமக்கு அனுமதிக்கிற கஷ்டங்களையும் தொல்லைகளையும் சரியாகச் சகிக்கும்போது, கிறிஸ்துவைப்போன்ற குணம் உருவாகி, உலகப்பிரகாரமான காரியங்களிலிருந்து கிறிஸ்தவனை வேறுபடுத்திக் காட்டுகின்றன.'[2]

[1] Ellen G. White, Testimonies for the Church, vol. 5, p. 344.

[2] Testimonies for the Church, vol. 5, p. 344.

**சமீபத்தில் நீங்கள் சந்தித்த கோபமூட்டல்கள், கஷ்டங்கள், தொல்லைகள்பற்றி யோசியுங்கள். அவற்றை 'தாழ்மையுடன் சகித்தீர்களா?' 'சரியாக சகித்தீர்களா'? இந்த அனுபவங்கள் உங்களை அதிக ஒழுக்கமுள்ளவர்களாக மாற்றுவதற்கு நீங்கள் என்ன செய்யலாம்?**

# இப்படிப்பட்டவர்களைக் கனமாய் எண்ணுங்கள்

**எப்பாப்பிரோதீத்துபற்றி பவுல் என்ன சொல்லுகிறார்? குறிப்பிட்ட என்ன மன நிலைகளும் செயல்களும் அவரது குணத்தை வெளிப்படுத்துகின்றன?**

---

எப்பாப்பிரோதீத்து இந்த நிருபத்தில் மட்டுமே வருகிறார்; ஒரு சில குறிப்புகளிலிருந்து அவரைப்பற்றி சற்றே அறியமுடிகிறது. அஃப்ரடைட் என்கிற அஞ்ஞான மார்க்கத்திலிருந்து அவர் மனம்மாறியிருக்கவேண்டும் என்பதை அவரது பெயர் சுட்டிக்காட்டுகிறது. அவரை 'உடன் வேலையாள்' என்று பவுல் அழைப்பதால், அவர் உற்சாகமான ஊழியராக, பவுலுடனும் சேர்ந்து ஊழியம் செய்திருக்கவேண்டும். 'உடன் சேவகன்' என்கிறார். 1:27. சுவிசேஷத்தை அறிவுக்கும்போது எப்பாப்பிரோதீத்துவுக்கு பல பிரச்சினைகள் வந்தாலும், தன் உயிரையும் கொடுக்க ஆயத்தமாக இருந்தார். பிலி 2:30.

அவர் பிலிப்பி திருச்சபையால் நியமிக்கப்பட்ட 'ஸ்தானாபதி.' இதற்கான கிரேக்க வார்த்தை **அபாஸ்டாலோஸ்.** சிறைச்சாலையில் பவுலுக்குச் சேவைசெய்யவும், அவரது தேவைகளைச் சந்திக்கவும் அனுப்பப்படுகிறார். பிலி 2:25. பிலிப்பு சபையார் அவரிடம்தான் பவுலுக்கு காணிக்கை கொடுத்து அனுப்பினார்கள். பிலி 4:18. ரோம சிறைக்கைதிகள் தங்களுக்குத் தேவையான துணிமணிகள், படுக்கைகள் போன்றவற்றை தங்கள் சொந்தச் செலவில் வாங்கவேண்டும்; அல்லது அவர்களது குடும்பத்தாரும் நண்பர்களும் கொடுக்கவேண்டும். எனவே, அந்தக் காணிக்கை அவருக்கு மிகவும் உதவியாக இருந்திருக்கும். அப் 24:23. ரோமில் அவரது இரண்டாவது சிறையிருப்பு முடிவடைகிற சமயத்தில், தீமோத்தேயுவிடம், "மாரிகாலத்துக்குமுன் நீ வந்து சேர்; துரோவா பட்டணத்தில் வைத்து வந்த மேலங்கியை எடுத்து வா" என்கிறார். 2தீமோ 4:21,13. பவுல் இருந்த கல் கட்டிடம் மிகவும் குளிரும் என்பதால், தடிமனான கம்பளி மேலங்கி தேவைப்பட்டது. மேலும், பிலிப்பிக்கு எழுதின நிருபத்தை எப்பாப்பிரோதீத்துவிடம்தான் கொடுத்து அனுப்பினார்.

பிலிப்பியில் பிரச்சினைகள் காணப்பட்டதால் (பாடம் 4), எப்பாப்பிரோதீத்துவை சீக்கிரமாக திருப்பி அனுப்பிவைக்க 'பெரிதும் விரும்பினார்'; மேலும் பிலிப்பியர்களிடம், 'கர்த்தருக்குள் நீங்கள் அவனைப் பெருமகிழ்ச்சியோடு வரவேற்றுக்கொள்ளுங்கள்' என்கிறார். பிலி 2:28,29. எளிய மொழிபெயர்ப்பு. தான் சிறையில் இருப்பதுகுறித்து அவர்கள் வருத்தமடைவதை பவுல் விரும்பவில்லை. எப்பாப்பிரோதீத்து போன்றவர்களை அவர்களது செல்வச்செழிப்பையோ, சமூக அந்தஸ்தையோ வைத்தல்ல, இயேசுவைப்போல அவர்களிடம் காணப்படுகிற தியாகமனப்பான்மையை வைத்து அவர்களை மிகுந்த கனமுள்ளவர்களாக எண்ணவேண்டும். பிலி 2:6-11,29.30; லூக் 22:25-27. கனம் என்பதற்கான கிரேக்க வார்த்தை புதிய ஏற்பாட்டில் ஒரு சில இடங்களில் மட்டுமே வருகிறது. உதாரணமாக சில இடங்கள்: நூற்றுக்கதிபதியின் 'மதிப்பிற்குரிய' வேலைக்காரன். லூக் 7:2. (சமகால மொழிபெயர்ப்பு). விருந்துக்கு அழைக்கப்பட்ட 'கனமுள்ளவர்கள்'. லூக் 14:8. 'விலையேறப்பெற்ற' மூலைக்கல் ஆகியவை. 1பேதுரு 2:4,6. அந்த வரிசையில் எப்பாப்பிரோதீத்துவும் வருவதால், அவர் உண்மையுள்ளவராக இருந்திருக்கவேண்டும்.

# மேலும் படிக்க:

'கிறிஸ்துவுக்கு மிக அருகில் நிற்கிறவனே பூமியில் அவரது தற்தியாக அன்பின் ஆவியை மிக அதிகமாகப் பருகியிருப்பான். அந்த அன்பு தன்னைப் புகழாது, இறுமாப்பாயிராது, தற்பொழிவை நாடாது, சினமடையாது, தீங்கு நினையாது. 1கொரி 13:4,5. கிறிஸ்து வானவர் மனுகுலத்தை இரட்சிக்கும்படிக்கு அனைத்தையும் கொடுக்கவும், வாழ்ந்து, பாடுபட்டு, மரிக்கவும் அவரை நடத்தியதுபோல, அந்த அன்புதான் அவரது சீடரையும் நடத்தும். இந்த ஆவிதான் பவுலின் வாழ்க்கையில் வெளிப்பட்டது. 'கிறிஸ்து எனக்கு ஜீவன்' என்றார். அதன்படி பவுலின் வாழ்க்கையானது கிறிஸ்துவை மனிதர்களுக்கு வெளிப்படுத்தியது; சாவு ஆதாயம். அது கிறிஸ்துவுக்கு ஆதாயம்; மரணம்தானே அவரது கிருபையின் வல்லமையை வெளிப்படுத்தி, ஆத்துமாக்களை அவரிடத்தில் சேர்க்கிறது. ஜீவனாலாகிலும், சாவினாலாகிலும், கிறிஸ்து என் சரீரத்தினாலே மகிமைப்படுவார் என்று சொன்னார். பிலி 1:21,20.'

'ஒவ்வோர் ஆத்துமாவும் சோதிக்கப்படப்போகிற காலம் வெகுதூரத்தில் இல்லை. மிருகத்தின் முத்திரையைத் தரிக்கும்படி வற்புறுத்தப்படுவோம். உலகத்தின் கோரிக்கைகளுக்கு ஒவ்வோர் அடியாக இணங்கி, உலகப் பழக்கவழக்கங்களுக்கு ஒத்துப்போனவர்கள், ஏளனத்திற்கும் நிந்தைக்கும் சிறையிருப்புக்கும் மரணத்திற்கும் ஆளாவதைவிட அந்த வல்லமைகளுக்கு ஒத்துப்போவதை கடினமாகப் பார்க்கமாட்டார்கள்.

'பெருந்திரளான கள்ளச்சகோதரர்கள் மெய்யானவர்களிடமிருந்து வேறுபடுத்தப்பட்ட பிறகு, மறைவானவை கண்களுக்கு வெளியரங்கமாகும். கிறிஸ்துவின் கொடியின்கீழிருப்பவர்கள் ஓசன்னா முழக்கமிடுவார்கள். பெலவீனரும் சுயத்தில் நம்பிக்கை வைக்காதோரும் தாங்கள் கிறிஸ்துவையும் அவரது சத்தியத்தையும் ஏற்றுக்கொள்வதாக வெளிப்படையாகச் சொல்வார்கள். திருச்சபையில் மிகவும் பெலவீனமும் தயக்கமும் உள்ளவர்கள் தாவீதைப் போல மாறுவார்கள்; அதாவது, செயல்படத் தைரியம் கொள்வார்கள். தேவ மக்களுக்கு எவ்வளவு இருளாகத் தோன்றுகிறதோ, அவ்வளவுக்கு நட்சத்திரங்கள் பிரகாசமாகத் தெரியும். சாத்தான் உண்மையுள்ளவர்களுக்கு மிகப்பயங்கரமாக தொல்லை கொடுப்பான்; ஆனால், இயேசுவின் நாமத்தில் அவர்கள் ஜெயம்பெற்றவர்களாக வருவார்கள்'.

## கலந்துரையாடக் கேள்விகள்

1 *'உலகத்தின் கோரிக்கைகளுக்கு ஒவ்வோர் அடியாக இணங்கி, உலகப் பழக்கவழக்கங்களுக்கு ஒத்துப்போனவர்கள்' பற்றிக் கொடுக்கப்படுகிற எச்சரிப்பில் என்னவெல்லாம் அடங்கும்? இது தனிநபர்களுக்கு மட்டுமல்ல, சபை முழுவதற்கும் எவ்வாறு பொருந்துமென்று கலந்தாலோசியுங்கள்.*

2 *'என்னைக் கனம்பண்ணுகிறவர்களை நான் கனம் பண்ணுவேன்' என்று தேவன் சொல்கிறார். 1சாமு 2:30. நாம் எந்தெந்த வழிகளில் தேவனைக் கனம்பண்ணுகிறோம்? அதுதான் 'தேவனை மகிமைப்படுத்துவதா?' வெளி 14:7. ஆம் என்றாலும் அல்லது இல்லை என்றாலும் காரணம் என்ன?*

3 *நம் இரட்சிப்பு நிறைவேறப் பிரயாசப்படவேண்டும் என்பதை கிரியைத்துவம் எனும் வலையில் சிக்காமல் எவ்வாறு புரிந்துகொள்ளலாம்?*

# பேய் பிடிகள் இல்லை


**ஒலிவியா ஃபோர்பேக்ஸ்**

மோராவோ லகூன் காட்டுவாசிகள் சாலமோன் தீவுகளைச் சேர்ந்த நரமாமிசப் பழக்கமுள்ள, போர்க்குண்ணமுள்ள மனிதர்கள். மூதாதையர்களின் மண்டை ஓடுகளை வைத்து வழிபடுபவர்கள். பேய் பயத்துடன் வாழ்பவர்கள்.

1902ம் வருட வாக்கில், மோராவோ இனத்தைச் சேர்ந்த டாடாகூ என்கிற தலைவர், உண்மையிலேயே பேய்க்குப்பயப்படவேண்டுமா என்றுயோசித்தார். அதைக் கண்டுபிடிக்கத் தீர்மானித்தவர், தன படகில் கயிறுபோன்ற ஒரு கொடியைக் கட்டாமல் மீன்பிடிக்க கிளம்பினார். அவ்வாறு கொடிகளைக் கட்டுவது பேய்களைச் சாந்தப்படுத்தி, அதிக மீன் கிடைக்க உதவுவதாக நம்பப்பட்டது. அந்தக் கொடி இல்லாமலே அதிக மீன்கள் கிடைத்தன. தலைவர் டாடாகூ வீட்டிற்குத் திரும்பியபோது, அவருக்கு ஒரு ஆண்குழந்தை பிறந்திருந்தது. குழந்தைக்கு காடா ரகோஸா என்று பெயரிட்டார், 'பேய்ப் பிடிகள் இல்லை' என்று அந்தப் பெயருக்கு அர்த்தம். காடா ரகோஸாவின் வாழ்க்கையில் தொடர்ந்து தேவ வல்லமை வெளிப்படவே அந்தச் சமூகம் முழுவதும் மாற்றமடைந்தது, மக்களை ஆட்டிப்படைத்த பேய்களின் பிடிகளும் கட்டுகளும் அறுந்தன.

நேர்மையற்ற ஐரோப்ப வணிகர்கள், வெளிநாட்டு பொருட்கள் தருவதாக சாலமோன் தீவுவாசிகளை ஏமாற்றி, தங்கள் கப்பலில் ஏற்றி, அடிமைகளாகக் கொண்டுசென்ற காலக்கட்டத்தில்தான் காடா ரகோஸா வாழ்ந்தார். ஆனால் 1914ம் ஆண்டு, காடா ரகோஸாவுக்கு 12 வயதாக இருந்தபோது, அட்வென்ட் ஹெரால்ட் கப்பல் மோராவோ லகூனுக்கு வந்தது. அந்தக் கூட்டத்தார் அத்தீவினரை ஏமாற்றவில்லை. மாறாக தளபதி கிரிஃப்பித்ஸ் எஃப். ஜோன்ஸ் தலைவர் டாடாகூவிடம் ஒரு பள்ளிக்கூடம் கட்டுவதற்கு நிலம் தரும்படி கேட்டார். அடுத்த வருடத்தில், சசகானா என்கிற இடத்தில் ஒரு பள்ளிக்கூடம் கட்டப்பட்டது; அதில் முதன் முதலாகச் சேர்ந்த 23 மாணவர்களில் காடா ரகோஸாவும் ஒருவர். அந்தப் பள்ளியில், அவர் இயேசுவை ஏற்றுக்கொண்டு, 1918இல் ஞானஸ்நானம் பெற்றார், வேறு ஒன்பது பேரும் ஞானஸ்நானம் பெற்றார்கள். தொடர்ந்து ஊழிய ஆசிரியராகவும், மொழிபெயர்ப்பாளராகவும், அச்சு இயந்திரத்தை இயகுகிற பணியாளராகவும் வேலைசெய்தார். 1935ம் வருடம், அட்வென்டிஸ்ட் போதகராக அபிஷேகம் செய்யப்பட்டார்.

இரண்டாம் உலகப்போரின்போது, சாலமோன் தீவுகளில் அட்வென்ட்டிஸ் ஊழியத்தின் பொறுப்பு காடா ரகோஸாவிடம் ஒப்படைக்கப்பட்டது. ஜப்பானியப் படைகள் அத்தீவைக் கைப்பற்றியபோது, கூட்டணி படையைச் சேர்ந்த வெள்ளையர்களைக் கொல்லும்படி அவருக்குக் கட்டளையிட்டார்கள். மனிதனுக்குக் கீழ்ப்படிவதைவிட தேவனுக்கே கீழ்ப்படிவேன் என்று சொன்னதால், அவரை விசாரித்து, சாட்டையால் அடித்து, சுட்டுக்கொல்ல உத்தரவிட்டார்கள்.



விசாரணை அதிகாரி அட்வென்ட்டிஸ்ட் சபையை வெறுத்தவர். தான் மூன்று எண்ணும்போது காடா ரகோஸோவைச் சுடச்சொன்னார். "ஒன்று, இரண்டு..." என்று சொன்னவரால், "மூன்று" என்று சொல்ல முடியவில்லை. பலமுறை முயன்றும் முடியவில்லை. 10 நாட்கள் சிறைச்சாலையில் கழித்த காடா ரகோஸா, அங்கிருந்து தப்பித்தார்.

காடா ரகோஸா 1964ம் ஆண்டு தன் 62ம் வயதில் மரித்தார். அவர் 37 வருடங்கள் சபைக்குச் சேவைசெய்தார்.